1972 டிசம்பர் 6]

திரு. ரா. ரா. முனுசாமி : தஞ்சாவூர், கடலூர் ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் மகளிர் பணி இல்லத்திற்காக இடங்கள் வாங்கப் பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லா மாவட்டங்களிலுமே வாங்கி மகளிர் பணி இல்லங்களை அமைக்க அரசு முன்வருமா ? மு. 9-3

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நமது மாநிலத்தில் மகளிர் பணி இல்லங்கள் தாம்பரத்திலும், தஞ்சாவூரிலும், கடலூரிலும் தான் இப்போது இருக்கின்றன. தாம்பரத்தில் உள்ளது சொந்த இடத்தில் இருக்கிறது. ஆகவே சொந்த இடம் இல்லாத கடலூர், தஞ்சாவூருக்காகத் தான் இப்போது நிலம் வாங்கப்பட்டது. மாவட்டத்திற்கு ஒன்று என்று ஏற்படுத்துகிற திட்டம் இப்போது இல்லை.

அரிசன நல வாரியங்கள்.

*51 வினா.—திரு. என். கிட்டப்பா, திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை தீவிரமாக அமுல் படுத்த கிராமப்புறங் களில் தனி அமைப்புகளை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்த வட்ட, மாவட்ட மாநில நிலைகளில் அரிசன நல வாரியங்களை நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாரியங்களுக்கு அங்கத்தினர்களை நியமனம் செய்வது பற்றி செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா :—தீண்டாமை ஒழிப்புச் சட்டம் அமல்படுத்தப் பட்டு வருகின்ற நிலைமை இருந்தாலும் பல கிராமங்களில் தீண்டாமை அனுசரிக்கப்பட்டே வருகிறது. எனவே ஒவ்வொரு கிராம பஞ்சாயத் திற்கும் ஒரு அதிகாரி என்ற முறையில் இல்லாவிட்டாலும் கிராம பஞ்சாயத்துக் குழுக்களை நியமித்து தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை மிகத் தீவிரமாக அமல் படுத்த அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்தக் காரணத்தையொட்டித் தான் இந்த நல வாரியத்தை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. கிராமத்திற்கு ஒருவர் என்று பொறுக்கி, பிறகு பிர்காவுக்கு ஒருவர் என்று பொறுக்கி, பிறகு தாலுக்காவிற்கு ஒருவர், மாவட்டத்திற்கு ஒருவர் என்பதாக பொறுக்கி இந்த வாரியம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத்தலைவர் அவர்களே, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இளையபெருமாள் குழு அளித்த ரிப்போர்ட் மத்திய அரசால் நம் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டதா ? அதன் அடிப்படையில் நம் அரசு அளித்த பரிந்துரை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்தப் பரிந்துரைகளின்மீது தான் மத்திய அரசின் ஆலோசனைபேரில் இந்த வாரியமே அமைக்கப் படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண் 52...

திரு. எ.சி. நரசிம்மன் : சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், இந்தக் கேள்வி 52-ஐக் கொடுத்துள்ள உறுப்பினர் தம் இடத்தில் இல்லை. அவரது கட்சி உறுப்பினர்களும் இந்த அவையில் இல்லை. ஆகவே இந்தக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரியானதுதான்.

அலுவலர் தேர்வுக்கழகத் தேர்வுகளுக்கான பயிற்சி பெற்றவர்கள்.

* 52 வினா —திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக்கழகம் நடத்தும் தேர்வுகளுக்கு தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாசிகளுக்கு துவக்கப்பட்ட பயிற்சி நிலையங்களில் 1971 டிசம்பர் வரை எத்தனை பேருக்கு பயிற்சி அளிக்கப் பட்டது ?

(இ) எத்தனை பேர் வெற்றி பெற்று வேலைவாய்ப்பைப் பெற்றனர் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1970-ஆம் ஆண்டில் 167 ஆடவருக்கும் நான்கு பெண்டிருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. 1971-ஆம் ஆண்டில் 602 ஆடவருக்கும் 24 பெண்டிருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

(இ) 1970-ல் பயிற்சி அளிக்கப்பட்டவருள் 29 ஆடவரும் இரண்டு பெண்டிரும் வெற்றி பெற்று வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

1971-ல் பயிற்சி அளிக்கப்பட்டவர்களில் எத்தனை பேர் வெற்றி பெற்று வேலை வாய்ப்பு பெறுவார்கள் என்ற விவரங்கள் ஜூலைத் திங்கள் இறுதிக்குள் முடிவு செய்யப்படும் என தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகம் தெரிவித்துள்ளது. அவ்விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

Encroachment of land in Chingleput district.

* 53 *Q.*—DR. H.V. HANDE : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Hon. Chief Minister has received a petition, dated 30th January 1972 from the residents of Valluvapakkam Village, Muthialpettai and Vanniarpettai in Chingleput district regarding encroachment by some persons in Survey No 3 ; and

(*b*) if so, the details thereof, and the action taken thereon ?